(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைக்க மைய அரசு 7.5 லட்சம் ரூபாய் கடனும் 2.5 லட்சம் ரூபாய் மானியமும் வழங்கியுள்ளது.

11-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

வினா எண் 8059 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரித்தல்

*7622 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காத்தாடி ஆலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது என்று கருதுகிறது இந்த இடத்தில் நல்ல காற்று, விசையுடன் உள்ளது. உலக வங்கி அதிகாரிகள் இந்த இடத்தைப் பார்வையிட்டுள்ளனர். உலக வங்கியின் முடிவான பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1990 ஆகஸ்ட் 20]

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைலர் அவர்களே, காற்றாடி ஆலையின் மூலமாக மின் சாரம் அளிக்கின்ற இந்த ஆலை, தமிழகத்தில் எங்கெல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? இந்த ஆலை களை அமைப்பதற்கு தனியார்களுக்கு அனுமதி கொடுக் கின்ற திட்டம் அரசிடத்திலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் முல்லைக் காடு, கயத்தாறிலே இரண்டு இடங்கள், முப்பனந்தல், புளியங் குளம், சுல்தான்பேட்டை ஆகிய ஆறு இடங்களில் இந்த காற் றாடி ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 14 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. தனியார்கள் இந்தத் திட்டத்தை ஆதரிப்பதற்கு முன் வந்திருகிறார்கள். காரணம் மின்சாரம் இல்லாத நேரங்களில் அவர்கள் டீசலை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்கின்றபோது அதிகமாக, ரூ. 2, ரூ. 3 என்ற அளவில் ஒரு யூனிட்டிற்கு ஆகிறது. இப்படி காற்றாடி ஆலை வைத்து காற்றின் மூலம் மின் சாரத்தைத் தயாரிப்பதால், சுமார் ரூ. 1.50 தான் அவர்களுக்கு ஆக வாய்ப்பிருக்கிறது. லாபத்திலே ஓடுகின்ற பெரிய தொழிற் சாலைகளுக்கு, இன்கம் டாக்சிலிருந்து அவர்களுக்கு ஒரு சலுகை யும் அளிக்கிறார்கள். ஆகவே இப்போது பல முதலாளிகள் காற் றாடி ஆலைகளை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அப் படி வருகிறவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்பதற்காக உட னடியாக அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதற்காக அவர்கள் விண்ணப்பித்தவுடன் அவர்களுக்கு அனுமதியை மின் சார வாரியமே வழங்கிவிடலாம். அரசுக்குக் கூட வரத் தேவை யில்லை என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பல் வேறு கம்பெனிகள் 250 கே.வி. மின் திறன் கொண்ட 6 யூனிட்டுகளை இதுவரையில் போட்டிருக்கிறார்கள். மேலும் பலர் இப்போது விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுக்காவிலே பம்பு செட்டு களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு கொஞ்சம் கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற காற்றாடி ஆலைகளை அமைத்தால் அவைகளுக்கு மிக விரைவிலே மின் இணைப்பு கொடுக்க முடியும் என்பதை உத்தேசித்து மிக விரைவிலே இந்த ஆய்க்குடி பகுதியிலே காற்றாடி ஆலை களை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காற்றாடி ஆலைகளின் மூலம் 500 மெகாவாட்டுகள் தயா ரிக்க முடியும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். எட்டாவது

(மாண்புமிகு திரு. துரைமுருகன்] [1990 ஆகஸ்ட் 20

ஐந்தாண்டுத் திட்டத்திலே 100 மெகாவாட் தயாரிக்கலாம் என்று நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அதில் 50 இடங்களை உலக வங்கியும் பார்வையிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரை கிடைத்த பிறகு—பரிந்துரை மட்டுமல்ல நிதியும் அவர்களிடத்திலிருந்து தான் நாம் பெறவேண்டும்—எனவே அந்தப் பரிந்துரை கிடைத்த பிறகு, உடனடியாக எங்கெங்கு சாத்தியம் உள்ளதோ அங்கெல்லாம் இந்த ஆலைகள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட கண்காட்சி.

*620 திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பூம்புகார் கைவினைப்பொருள் கழகத்தால் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளின் மூலம் கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு இழப்பு?

(இ) தற்போது அதன் நிலை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு கைவினைப்பொருள் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 376 கலைப் பொருள் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் ரூ. 56 இலட்சம் நிகர லாபம் ஈட்டியிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு மொத்தம் ரூ. 84 இலட்சம். இந்த ஆண்டுதான் அந்த இழப்பிலிருந்து மீண்டு ஏறத்தாழ ரூ. 13 இலட்சம் லாபத்தோடு இந்த நிறுவனம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

11-05 மணி

திருமதி எஸ் பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூம்புகார் கைவினைப் பொருள் கழகத்தில், தமிழகம் தவிர்த்து வெளி மாநிலங்களில் நடைபெற்ற கண்காட்சிகளில் அரசுக்கு இழப்பு ஏதேனும் ஏற்பட்டதா என அறிய விரும்புகிறேன்.